**செய்தி வெளியீடு எண் : 1672** **நாள் : 25.09.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி இன்று (25.09.2022) தமிழகம் முழுவதும் நடைபெற்ற 38வது சிறப்பு மெகா கோவிட்– 19 தடுப்பூசி முகாமில் 7.75 இலட்சம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், அவர்கள் தகவல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்களில் என மொத்தம் 50,000 சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றது.

இதுவரை நடைபெற்ற 37 மெகா கோவிட் தடுப்பூசி முகாம்களில் 5 கோடியே 43 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

இதுவரை (25–09–2022) 12–14 வயதுயுடைய **19,91,349 (93.89%)** பயனாளிகளுக்கு முதல் தவணை **15,92,420 (75.08%)** பயனாளிகளுக்கு மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 15–17 வயதுயுடைய **30,54,613 (91.29%)** பயனாளிகளுக்கு முதல் தவணை மற்றும் **26,02,003 (77.76%)** பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசியாக மொத்தம் **92,27,702 (21.42%)** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று (25–09–2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாமில் 12 வயதிற்கு மேற்பட்ட **7,75,193** பயனாளிகளுக்கு கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக **29,729** பயனாளிகளுக்கும் இரண்டாவது தவணையாக **1,49,804** பயனாளிகளுக்கும் மற்றும் முன்னெச்சரிக்கை தவணையாக **5,95,660** பயனாளிகளுக்கு கோவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 18 வயதிற்கு மேற்பட்டோரில் **96.59%** முதல் தவணையாகவும் **91.61%** இரண்டாம் தவணையாகவும் கோவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட விருகம்பாக்கம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்ட சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா அவர்கள், மக்கள் மற்றும் குடும்ப நல்வாழ்வுத் துறை சுகாதார செயலாளர் டாக்டர்.ப.செந்தில் குமார், இ.ஆ.ப., அவர்கள், நிலைக்குழு தலைவர் (கணக்கு) திரு.க.தனசேகரன் அவர்கள், நிலைக்குழு தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர்.கோ.சாந்தகுமாரி அவர்கள், மண்டலக்குழு

தலைவர் திரு.எம்.கிருஷ்ணமுர்த்தி அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு. சங்கர்லால் குமாவாத், இ.ஆ.ப., அவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துதுறை, இயக்குநர், டாக்டர்.செல்வ விநாயகம் அவர்கள், இணை இயக்குநர் (தடுப்பூசி), மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகர நல அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், மாநிலத்தில் இன்று (25.09.2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை முன்னிட்டு நாளை (26.09.2022) கோவிட் தடுப்பூசி பணிகள் நடைபெறாது என தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in